**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**OS No.249/2022**

**19.11.2025 வா.சா.2 கண்ணன் த/பெ. வேடியப்பன்**

**சத்திய பிரமாணத்தின் பேரில் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

செல்வதுரை 2 புல எண்களில் உள்ள சொத்தை கிரையம் பெற்று அதில் வீடு கட்டி அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். அந்த சொத்தின் புல எண்கள் எனக்கு தெரியாது. பொது அதிகாரப்பத்திரத்தில் கண்ட சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. செல்வதுரையின் காலத்திற்கு பின் அவருடைய 3 பிள்ளைகள் சொத்தை 3 ஆக பிரித்து தனித்தனியாக அனுபவித்து வருகிறார்கள் என்றால் இல்லை. செல்வதுரை மட்டும்தான் அனுபவித்து வந்தார். செல்வதுரை உயிருடன் இருக்கும்போதே பிள்ளைகளுக்கு திருமணம் செய்துவைத்து சொத்தை 3 ஆக பிரித்து அந்த பிள்ளைகள் தனித்தனியாக அனுபவித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. அவர்கள் செல்வதுரையுடன் கூட்டுக்குடும்பமாக இருந்தார்கள். தற்போது செல்வதுரையின் 3 பிள்ளைகளும் தனித்தனியாக அந்த இடத்தில்தான் இருக்கிறார்கள் என்றால் எனக்கு அதைப்பற்றி தெரியாது. என் மனைவி யார் மீது பரிகாரம் கேட்கிறார் என்றால் பூவேந்தன் என்பவர் அதில் தற்போது குடியிருக்கிறார். அவர் காலி செய்து ஸ்வாதீனத்தாரிடம் ஒப்படைக்கவேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார். என் மனைவி தாக்கல் செய்த வழக்கில் உறவு முறை கருத்து கொண்டு ரசீது எதையும் பெறவில்லை என்ற விவரத்தை தாவாவில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்பட்டுள்ளது. நான் கடன் பொறுப்பிற்காக செல்வதுரையிடம் இருந்து மிரட்டி பொது அதிகாரப்பத்திரத்தை வாங்கி அதை தவறாக பயன்படுத்தி என் மனைவியின் பெயரில் கிரையப்பத்திரம் ஏற்படுத்திக்கொடுத்துள்ளேன் என்றால் அது உண்மையல்ல. நான் சொல்வதுபோல் கிரையப்பத்திரத்தின் அடிப்படையில் பொது அதிகார முகவர் என்ற அடிப்படையில் நான் என் மனைவியிடம் இருந்து பணம் பெற்று அதை செல்வதுரையிடம் செலுத்தவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு செலுத்தியதற்கு ரசீது எதுவும் இல்லை என்றால் அவரும் கொடுக்கவில்லை. நானும் கேட்கவில்லை. கிரையம் பத்திரம் ஏற்படுத்தியதாக சொல்லப்படும் அதே தேதியில் அந்த அதிகார ஆவணத்தில் கண்ட மீதமுள்ள சொத்துக்களை பொறுத்து என் மகன் சேகருக்கு ஒரு கிரைய உடன்படிக்கை ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் அடமான பத்திரம்தான் செய்தேன். ரூ. 5,00,000/- ற்கு அடமானம் செய்தேன். அந்த அடமான ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் என் வக்கீலிடம் கொடுத்துள்ளேன்.

19.02.2014 அன்று என் மகன் சேகருடன் ரூ. 2,00,000/- ற்கு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டு அதற்கு ரூ.50,000/- முன் பணம் பெற்றேன் என்றால் சரியல்ல. அந்த கிரைய ஒப்பந்தம் ஆவண எண்.1525/2014 என பதிவாகி உள்ளது என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தம் எத்தனை இன சொத்துகளுக்கு எழுதப்பட்டுள்ளது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. அந்த சொத்து பொது அதிகாரப்பத்திரத்தில் கண்ட சொத்து சம்மந்தமாகதான் ஏற்பட்டது என்றால் சரிதான். செல்வதுரையின் சொத்துக்களை அபகரிக்கும் நோக்கத்தில் ரூ. 1,50,00,000/- மதிப்பிலான சொத்தை ரூ. 2,00,000/- ற்கு கிரையம் ஒப்பந்தம் செய்தோம் என்றால் சரியல்ல. செல்வதுரையின் சொத்துக்களை அபகரிக்கும் நோக்கத்தில் ஆவணங்களை தயாரித்துகொண்டு வந்ததால் 01.07.2014 ல் எனக்கு வழங்கிய பொது அதிகாரத்தை செல்வதுரை ரத்து செய்தார் என்றால் அது உண்மையல்ல. அந்த ரத்து பத்திரம் திருவண்ணாமலை இணை சார்பதிவாளர் -II அலுவலகத்தில் ஆவண எண். 5639/2014 என பதிவாகி உள்ளது என்றால் சரியல்ல. நான் மோசடியாக ஆவணத்தை தயாரித்துக்கொண்டது சம்மந்தமாக 18.04.2015ல் செல்வதுரை திருவண்ணாமலை நகர காவல் நிலையத்தில் என் மீதும் என் மனைவி மீதும் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. அந்த புகாரின் மீது CSR No. 131/2015 வழங்கப்பட்டு விசாரணை செய்தார்கள் என்றால் சரியல்ல. நாங்கள்தான் புகார் கொடுத்தோம். எங்கள் புகார் மீதும் போலிசார் விசாரணை செய்யவில்லை, கோர்டில் பார்த்துக்கொள்ளுமாறு சொல்லிவிட்டார்கள். நான் போலிசில் புகார் கொடுத்து நடவடிக்கை எடுக்காத காரணத்தால் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் இது சம்மந்தமாக தனி நபர் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த தனிநபர் புகாரில் எந்த முகாந்திரமும் இல்லை என்று தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை இத்துடன் நிறுத்தப்படுகிறது.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.